தமிழ்நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) அரசினர் தீர்மானம்.

வினா நேரத்தை நிறுத்திவைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப்பேரவை விதி 22-இன் கீழ் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்து இருக்கும் 'அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(2) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

திரு கே.டி.கே. தங்கமணி : தலைவர் அவர்களே, எப்ரல் 30-ஆம் தேதியோடு மெம்பர்களுடைய பதவிக் காலம் முடிவடைவதால், மூன்று மாதகாலம் நீட்டிக்க வேண்டும் என்று கோரி இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

எற்கனவே இந்தச் சட்டப் போவையில் அமைச்சர் அவர்கள் ஜுலை மாத இறுதிக்குள்ளாக நகரசபைத் தேர்தல் நடைபெறும் என்று சொன்னதன் அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நாங்கள் விரும்புவதெல்லாம், மீண்டும் ஒத்திப் போடாத அளவுக்கு, ஜுலை மாத இறுதிக்குள் அந்தத் தேர்தல் நடைபெற வேண்டும். குறிப்பாக, சில நகரசபைகளில் ரிட் மனுக்கள், இம்மாதிரியெல்லாம் போட்டு சில நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, எக் காரணத்தைக் கொண்டும் இத்தேர்தலை ஒத்திப்போட முடியாது என்ற நிலையை எற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு பொதுவாக இந்த மசோதாவை எதிர்ப்பதற்கில்லை என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

---

* 16-4-1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74) நிறைவேற்றப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) 1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக் கால நீட்டிப்பு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 25/74).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் மூன்று பஞ்சாயத்துக்களையும் சேர்த்து மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்துவதாக இருக்கிறது. இப்பொழுது சில பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் தம்முடைய உறுப்பினர் பதவிக்காலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற முறையில் அவர்கள் ரிட் மனு போட்டிருக்கிறார்கள். ஒன்று, அவர்கள் அவற்றை வாபஸ் வாங்கச் சொல்ல வேண்டும்; அல்லது, அந்தத் தொகுதிகளை ஒதுக்கிவிட்டு இந்தத் தேர்தலை நடத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தை நான் சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து உரையை முடிக்கின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே " 1974-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 25/74 நிறைவேற்றப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

---

* 16-4-1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.